# ரொரன்ரோ உயர்மறைமாவட்டத்திற்கான அருள்பணிசார்ந்த திட்டம்

ரொரன்ரோ மறைமாவட்ட இறைமக்களுக்கு
ரொரன்ரோ பேராயர் விடுக்கும் திருத்தூது மடல்:



ரொரன்ரோ உயர்மறைமாவட்டத்திற்கான அருட்பணிசார்ந்த திட்டத்தின் தொகுப்பானது இயேசு எங்களிடம் எவ்வகையில் அவரது சீடர்களாக வாழ அழைக்கின்றார் என்பது பற்றி இறையருளோடு சிந்திப்பதற்கான வாய்ப்பை எமக்கு வழங்குகின்றது. எமது முயற்சிகளின் அடித்தளமாக இருக்கும் செபமே, எமது அருட்பணி சார்ந்த திட்டத்தின் அடிநாதமாக அமைந்துள்ளது.

எமது இறைபணி இரு வகையில் அமைந்துள்ளது. எமது அருட்பணி சார்ந்த (ஆன்மிகம்), இயேசு தூய பேதுருவிடம் என் ஆடுகளை மேய் என கூறியதற்கேற்ப அவரால் உருவாக்கப்பட்ட இறைபணி வாழ்விலிருந்து பெறப்பட்ட பட்டறிவுகன் வழியாக அர்ப்பணிக்கப்பட்ட கத்தோலிக்கர்களது நம்பிக்கையை ஆழப்படுத்த ஊக்கப்படுத்துவதாகும் இரண்டாவதாக எமது திருத்தூதுப்பணி, விசுவாசிகளுக்கும், திருச்சபையை சாராதவர்களுக்கும் நற்செய்தியை அறிவிப்பது ஆகும். இவ்வகையான மேய்ப்புப் பணி திருத்தூதர் பவுலின் மாதிரியில் அமைந்துள்ளது. அவர் தம் வாழ்வில் மனம் மாறி கிறித்துவை சந்தித்தார்: பின் கிறித்துவை உலகம் அனைத்திற்கும் அறிவித்தார்.

எமது அருட்பணிசார்ந்த திட்டமும் எமது மறை மாவட்டத்தில் வாழும் ஒவ்வொரு கத்தோலிக்கரிடமும் தமக்கு இறைவனால் தரப்பட்ட கொடைகளைப் பற்றி சிந்திக்கவும், ஆழமான ஒரு மனமாற்றத்திற்கு எம்மை உட்படுத்தி அதன் வழியாக தாராள மனதை உருவாக்கி எமது நேரத்தையும் வல்லமைகளையும் பிறருடனும் பகிர்ந்து கொள்ள அழைக்கின்றது. நாம் வாழும் ஒவ்வொரு வினாடியும் நன்றி உணர்வு உள்ளவர்களாகவும், எமக்கு தரப்பட்ட கொடைகளை இறைபணியிலும் பிறர்பணியிலும் பயனுள்ள முறையில் செயலாற்றவும் முன்வருவோம்.

அருட்பணிசார்ந்த திட்டத்தில் அனைத்திலும் குறிப்பிடப்பட்டவைகள் பற்றி நாம் தெளிவு பெறவேண்டும். மிகவும் பயனுள்ள முறையில் இப்பணித்திட்டத்தை செயற்படுத்த எமது குடும்பங்களையும் குறிப்பாக நமது இள வயதினரையும் ஈடுபடுத்தவேண்டும். பல் வகைமை கொண்ட பல்லின பண்பாட்டை நாம் மேன்மைப்படுத்த வேண்டும்: எமது வளங்களை நுண்ணறிவோடு பயன் படுத்தவேண்டும்: சிறப்பாக முறையில் தொடர்புகளையும் தொடர்பு ஊடகங்களையும் பாவிக்கவேண்டும்.

இத்தொகுப்பானது விவிலியத்தில் சித்தரிக்கப்படும் திராட்சையையும் (இயேசு) அதன் கொடிகளான (அவர் மக்களையும்) நினைவூட்டுகின்றது. ஐந்து சிறப்பான வழிகாட்டிகள் எமது நோக்கினை அடையத் துணையாக அமையும் இந்த அருட்பணிசார்ந்த திட்டத்தைச் சிறப்பாக விளங்கிக் கொள்ளவும் முழுமையான செயற்பாடுகளை அறியவும் சிந்தனையை அதிகமாக்கிடவும் எமது மறைமாவட்ட இணையத்தளத்தை www.archtoronto.org/pastoral பார்க்க உங்களை அழைக்கின்றேன்.

எமது சமூகத்தை பலப்படுத்தும் பயணத்தில் நீங்கள் ஆற்றும் பங்குக்கு நான் நன்றியுடையவனாக இருக்கின்றேன். இறைவனின் தோட்டத்தில் நாமனைவரும் ஒன்றாக உழைக்கவும் உங்கள் அனைவருக்காகவும் எனது செபத்திலும் வேண்டுகின்றேன்.

கிறித்துவில் உண்மையுள்ள

+ Thomas Card. Collins

தோமஸ் கார்டினல் கொலின்ஸ்
ரொரன்ரோப் பேராயர்

# ஐந்து சிறப்பான வழிகாட்டிகள்

**பங்கில் வாழ்வு**

நம்பிக்கைக் கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர். எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர். (திருத்தூதர் பணிகள் 2:44)





நமது பங்குகள் நாம் ஒருவரையொருவர் சந்திக்கக்கவும் கிறித்துவை எதிர்கொள்ளவும் ஏற்ற ஆன்மிக இல்லங்களாக அமைகின்றன. எம்மிடையே உள்ள 225 பங்குகளிலும், ஒவ்வொரு வாரமும் நம்மைச் சார்ந்தவர்களையும், பல ஆண்டுகளுக்குப் பிறகு திருச்சபைக்கு திரும்புகின்றவர்களையும் வரவேற்கும் இடங்களாக மாற்றுவதே எமது திட்டமாகும். ஒவ்வொரு வாரமும் அருட்சாதனங்களை கொண்டாடத் தகுந்த விதத்தில் எம்மை அணியமாக்கி மற்றவர்களையும் ஊக்கப்படுத்தி பொருளுள்ள முறையில் பங்கு கொள்ள ஊக்குவிப்போம். எம்மை வழி நடத்தும் நமது அருட்பணியாளர்களுக்கும் திருத்தொண்டர்களுக்கும் எம் ஆதரவையளித்து எம்மிடம் உதவிகள் வேண்டப்படும்வேளை அவர்களுக்கு துணை நிற்போம். இவையனைத்திலும் ஒன்றாக செயல் படுவோம். எம்மிடையேயுள்ள பல பங்குகளில் ஏற்கனவே குடும்பங்களுக்கும் திருச்சபைக்கும் உதவும் திட்டங்கள் போன்ற வெளித்திருப்பணிகள் செயல்படுகின்றன. அவைபற்றி நாம் பெருமையடைகின்றோம். பங்கு வாழ்வோடு தொடர்பான எட்டு நோக்கங்கள், இவை தொடர்பான எடுத்துக்காட்டுகள் பற்றி எமது இனையத்தளத்தில்

**தேவஅழைத்தல்**

இயேசு அவர்களைப் பார்த்து, ”என் பின்னே வாருங்கள். நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்” என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினார்கள். (மத் 4: 19-20)





இறைவன் எம் ஒவ்வொருவரிடமும் எமது வலைகளை வீசச் சொல்லி அவர் எங்களை எங்கே கொண்டு செல்கின்றார் என்பதை உணர அழைக்கின்றார். எமது மறைமாவட்டத்தில் எமது பங்குகளை வழிநடத்த அருட்பணியாளர்கள் தேவை: அவர்களுக்கு உதவ திருத்தொண்டர்களும், எமது பல்வகைப்பட்ட திருப்பணிகளை ஆற்ற தகுதி பெற்ற பொதுநிலையினருக்கும் வளர்ந்துவரும் துறவற சமூகங்களுக்கும் உதவி தேவை. ஒவ்வொரு கத்தோலிக்கரும் தமது செபத்தாலும், ஊக்கத்தாலும், இறை உந்துததாலும் தேவஅழைத்தலை ஊக்கப்படுத்தலாம். நாம் ஆற்றும் திருப்பணிகள் சிறப்பாக இடம்பெற தயாரிக்கப்படும் பயிற்சி நெறிகள் தகுந்த முறையில் நடத்தப்படவேண்டும் என்பதை நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். பற்றுதியுடனும் நேர்மையாகவும் பல ஆண்டுகள் நம்மிடையே திருப்பணி புரிந்த அருட்பணியாளர்களை நாம் மறக்கமுடியாது. அவர்களின் முதுமைக்காலத்தின் தேவைகளையும் நாம் நிறைவு செய்யவேண்டும். நாமனைவரும் ஒன்றாக இறைஅழைத்தல் எமது உயர்மறைமாவட்டத்தில் பெருக உழைப்போம். இறைஅழைத்தலை ஊக்கப்படுத்த ஆறு வழிவகைகளை எமது இனையத்தளத்தில் (www.archtoronto.org/vocations) நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

## நீதியும் அன்பும் நிலைக்க கத்தோலிக்க வெளிக் களப் பணிகள்

ஆண்டவராகிய என் தலைவரின் ஆவி என்மேல் உளது. ஏனெனில், அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார். ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிக்கவும், உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்தவும், சிறைப்பட்டோருக்கு விடுதலையைப் பறைசாற்றவும், கட்டுண்டோருக்கு விடிவைத் தெரிவிக்கவும் என்னை அனுப்பியுள்ளார். (எசாயா 61:1)



அநீதி இழைக்கப்படும் இடங்களில் எமது பணி பல்வேறு நிலைகளில் முன்நிலைப்படுத்தப் படவேண்டுமென்று எமது அருள்பணி சார்ந்த திட்டம் அழைக்கின்றது. ஏழைகளுக்கும், ஒதுக்கப்பட்டவர்களுக்கும், பல்கலைக்கழக வளாகங்களில் வாழும் மாணவர்களுக்கும், சிறையில் வாடுவோருக்கும், அகதிகளாக புகலிடம் தேடுவோருக்கும், உடலாலும் உள்ளத்தாலும் துன்பப்படுவோருக்கும் எமது அருட் பணி சாந்த சேவை அவசியமாகின்றது. இப்பணிகளை எமது பங்குகளின் வழியாகவும், பொதுநிலையினர் இயக்கங்கள், கத்தோலிக்க அமைப்புகள், ஆன்மிக பணியகங்கள் மற்றும் அருட்பணி சார்ந்த சேவையமைப்புகள் ஊடாக ஆற்றலாம். எம்மிடையே செயல்புரியும் கத்தோலிக்க சமூக அமைப்புகள் “செயர் லைவ்“ போன்றவற்றின் அளப்பரிய சேவைகளுக்காக நாம் நன்றி கூறுகின்றோம். ஆனால் இன்னும் அதிகமான பணிகள் ஆற்றப்படவுள்ளன. “உங்கள் வாழ்வில் இறைவனை மகிமைப்படுத்த, சமாதானத்துடன் செல்லுங்கள்” எனும் வார்த்தைகளை திருப்பலியில் கேட்கின்றோம். எமது சமூகங்களில் எவ்வகையில் இயேசுவின் முகங்களாகவும், கரங்களாகவும் செயலாற்ற முடியும். இவைகளுக்கான நான்கு வழிவகைகளை அறிந்து கொள்ள www.archtoronto.org/outreach எனும் இணையத்தளத்தில Catholic Outreach in Justice and Love எனும் தலைப்பைப் பார்க்கவும்.



## சமூகத்தில் நற்செய்திப்பணி

இயேசு அவர்களை நோக்கி, ”உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள். (மாற் 16:15)





“புதிய நற்செய்தி அறிவிப்புப் பணி“ என்பது கிறித்துவில் நாம் வைத்துள்ள நம்பிக்கையின் வழியாக பெறும் மகிழ்ச்சியை நுகர்வதிலும் அதை பிறருடன் பகிர்ந்து கொள்ளுதலும் ஆகும். எமது நம்பிக்கையின் குரல்கள் எத்திசையும் ஒலிக்குமாறு நாம் உழைக்கவேண்டும். என்றுமில்லாதவாறு இன்று கிறித்துவின் நற்செய்தி உலகுக்கு தேவை என்பதை நாம் நம்பவேண்டும். செயலளவில் எமது கிறித்துவுக்கான சாட்சியம் பலப்படுத்த வேண்டும். பள்ளிகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் பணியாற்றுவதன் மூலம் நமது கத்தோலிக்கத்தின் விழுமியங்களை நிலைபெறச் செய்யலாம். நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, மறை சார்ந்த மற்றும் பொதுவான தொடர்பு ஊடகங்களிலும் உரையாடல்களிலும் பங்கு கொண்டு நற்செய்தியை இன்னும் பொருளுள்ள முறையில் அறிவிப்புப் பணியை நமது உயர்மறைமாவட்டத்தில் ஆற்றவேண்டும். சமூகத்தில் நற்செய்திப்பணி பற்றி மேலும் அறிவதற்கும் அப்பணியில் நாம் அடைய வேண்டிய ஐந்து குறிக்கொள்கள் பற்றி தெரிந்து கொள்ள www.archtoronto.org/evangelize எனும் இணையத்தளத்தைப் பாருங்கள்.



**நமது பேராலயம் எமது நற்செய்திப்பணியின் அடையாளம்**
கிறித்து இயேசுவையே மூலைக்கல்லாகக் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமாய் இருக்கிறீர்கள். - நீங்களும் அவரோடு இணைந்து தூய ஆவி வழியாகக் கடவுளின் உறைவிடமாகக் கட்டப்பட்டு வருகிறீர்கள். (எபேசி2: 20-22)

---

தூய மைக்கேல் பேராலாயம் எமது மறைமாவட்டத்தின் தாய்த் தேவாலயமாக விளங்குகின்றது. நமது பேராயரின் அருள் பணி வழியாகவும், நம்பிக்கையைக் காப்பவரான விண்ணக பாதுகாவலாராம் அதிதூதராம் மைக்கேல் வழியாகவும் ஒவ்வொரு இறைமக்களும் இணைக்கப்படுகின்றோம். நமது பங்குகளின் முன்மாதிரியாக விளங்கும் பேராலயம் அருள்பணியிலும் திறந்த சாட்சியத்திலும் முன்னணி வகிக்கின்றது. பேராலயம் சிறப்பாகக் காட்சியளிக்க கூடிய விதத்திலும் பல திருத்த வேலைகள் நடைபெற்றும் வருகின்றது. பேராலயத்துக்கு அருகில் அனைவர் மனதையும் கவரத்தக்க வகையில் ஒரு பேராலய முற்றம் ஒன்றை உருவாக்கி அனைவரும் கூடும் ஓர் இடமாகத் திருவழிபாட்டுக்கும் வெளிக்கள பணிக்கும் தூய மைக்கேல் பாடகர் பள்ளியினூடாக ஏழைகளுக்கு உதவுவதற்கும், அருட்பணி தொடர்பான விடயங்களை கற்பதற்கான ஒரு மையத்தையும், கலைகள், தொடர்பு ஊடகங்களை ஆகியவற்றை பயன்படுத்தி உலகைப் பங்கு கொள்ள வைக்கும் எனவும் எதிர்பார்க்கலாம். பல்லின மக்கள் வாழும் மற்றும் வளர்ந்து வரும் சமூக தொடர்பு துறைகளின் மத்தியில் கத்தோலிக்க திருச்சபை நம்பிக்கைக்கும் நற்செய்தி அறிவிப்புப் பணிக்கும் ஒரு நுழைவாயிலாக அமையவேண்டும். இந்தச் செயற்பாட்டினை அடைய நான்கு இலக்குகளை இந்த இணையத்தளத்தில் www.archtoronto.org/cathedral பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

www.archtoronto.org

# உரையாடலைத் தொடருவோம்

நமது அருட்பணிசார்ந்த திட்டத்தில் உங்களை இணைப்பதில் நாங்கள் மகிழ்வடைகிறோம். நமது திருப்பயணத்திற்கான முழுமையான வரை படத்தையும் அதற்குத் துணைபுரிவதற்கான ஏதக களையும் எமது இணையத்தளத்தில் பெறலாம். ஏற்கனவே எமது ஆலயங்களில் அற்புதமான நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. நாம் அவற்றைக் கொண்டாடவும் அவ்வடித்தளத் திலிருந்து கட்டியெழுப்பவும் விரும்புகின்றோம். இன்னும் அதிகமாக செய்வதற்கு இருக்கின்றது. இங்கே நீங்கள் ஆற்றக் கூடிய உதவிகள் இதோ!

- உங்கள் பங்கில் ஈடுபாடு கொள்ளுங்கள். இறைவனின் திருப்பீடத்திலோ, பங்குச் சபை யிலோ பணிபுரியுங்கள். வாசகராவோ,பாடகர் குழுவிலோ, வீடு தரிசிப்பதிலோ ஈடுபடுங்கள். ஒவ்வொரு இறைமக்களும் தங்களிடையே யுள்ள கொடைகளை உய்த்துணர்ந்து இல்லத் திருச்சபையில் பணியாற்ற அழைக்கின்றோம்.

- எங்கள் இணையத்தளத்தை www.archtoronto.org/pastoral ஐ பார்த்து உயர் மறைமாவட்ட அருட்பணி சார்ந்த திட்டம் பற்றி உங்கள் கருத்தினை தெரிவியுங்கள். உங்கள் வாழ்வில் ஏற்படும் மாற்றம் பற்றி என்ன சிந்திக்கின்றீர்கள்? உங்கள் பங்கில் சிறப்பாக நடைபெறுபவை எவை? கூடுதலாகச் செய்யக் கூடியவையாவை?

- செபம் - இறைவனின் திராட்சைத் தோட்டத்தில் இறைபணி புரியும் அனைத்து இறைமக்களுக்காகவும் செபிக்குமாறு எமது உயர்மறைமாவட்டத்திலிருக்கும் ஒவ்வொரு கத்தோலிக்கரிடமும் வேண்டுகின்றோம். அருட் பணி சார்ந்த திட்டத்திற்கு அருள்நெறியில் ஒருவர் ஒருவருக்கு பக்கபலமாக செயற்பட்டு முதன்மையான படிமானங்களில் எமது இல்லத்திருச்சபைக்கும் உயர்மறைமாவட்டத் திற்கும் துணை நிற்போம். இறைவனின் அன்னையாம் மரியாவிடம் இத்திட்டத்தை முன்வைத்து இயேசுவின் நம்பிக்கைக்குரிய சீடர்களாக நாம் வாழ நமது அன்னை நமக்காக பரிந்து பேச வேண்டுவோம்.

---

twitter.com/archtoronto

facebook.com/archtoronto

# டொரண்டோ உயர்மறைமாவட்டத்திற்கான அருள்பணிசார்ந்த திட்டம்

நமது அருள்பணி சார்ந்த இறைத்திட்டத்தின் முக்கிய விடயங்கள் நம் இலக்குகளை அடையவும் சமூகத்தின் நலனைப் பேணவும் வெளிக்கள பணிகளை ஆற்றவும் உதவும். இந்த இலக்குகள் பற்றி சிந்திக்கும்பொழுது இத்திட்டம் எமது உயர் மறைமாவட்டத்திலுள்ள ஒவ்வொரு இறைமக்களுக்கும் உதவ வேண்டும் என்பதே எமது வேண்டுதலாகும்.













**பங்கில் வாழ்வு**

நம்பிக்கைக் கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர். எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர். (திருத்தூதர் பணிகள் 2:44)

(1) ஞாயிறு வழிபாட்டை முழுமையாக கொண்டாடும் பொழுது ஒவ்வோர் இறைமக்களினதும் உயிர்ப்பானதும் உளமார்ந்ததுமான பங்கு அவசியம்

(2) செபத்திற்கும், அருள்நெறிப்பயிற்சிக்கும் இவைகளை வளமூட்டுவதற்குமான வாய்ப்பு

(3) வரவேற்புக்கும் விருந்தோம்பலுக்கும் பிறரை உள்வாங்கலுக்கும் பங்கிலே ஒரு சமூக வாழ்வை ஏற்படுத்தல்

(4) வலுவான அருட்பணி தொடர்பான தலைமைத்துவத்தை ஏற்படுத்தி பல்வகைப்பட்டதும் ஒன்றுபட்டு செயல்படக் கூடியதுமான அருள்பணிகளை ஊக்கப்படுத்தல்.

(5) ஆற்றல் மிக்க அருட்பணிசார்ந்த ஆளுமையை உருவாக்க சிறந்த கட்டமைப்பையும் செயல் குழுக்களையும் பங்கில் உருவாக்கி தோழமையை ஊக்கப்படுத்தி பொறுப்புச் சொல்லக்கூடிய நிலையை ஏற்படுத்தல்

(6) குடும்பங்களுக்கும் இல்லத்திருச்சபைக்கும் துணைபுரிதல்

(7) நற்செய்தி பணிக்கு புத்தூக்கமும், மறைக்கல்விக்கும் நம்பிக்கை உருவாக்கத்துக்குமான வாக்குறுதிப் பொறுப்பு

(8) திருத்தூதுப் பணிக்கும், வெளிக்கள் திருப்பணிகளுக்கும் சேவைக்குமான வலுவான சாட்சியம்

**தேவஅழைத்தல்**

இயேசு அவர்களைப் பார்த்து, ”என் பின்னே வாருங்கள். நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்” என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினார்கள். (மத் 4:19-20)

(1) தேவஅழைத்தலுக்காகச் செபித்தல்

(2) திருநிலைப்படுத்தப்பட்ட திருப்பணிகளுக்கும் துறவற வாழ்வுக்குமான தேவஅழைத்தலை ஊக்கப்படுத்தல்

(3) பங்குகளிலும் உயர்மறைமாவட்ட அலுவலகங்களிலும் பொதுநிலையினரின் அருள்பணிசார்ந்த பங்களிப்பை வளர்த்தல்

(4) திருநிலைப்படுத்தப்படும் திருப்பணியாளர்களை உருவாக்கும் தூய அகுத்தீனார் குருமடத்தில் உருவாக்களுக்கும் கொடைகளை வழங்கல். தயாரிக்கப்படும் திட்டங்களை ஒருமைப்படுத்தல்

(5) பணி உருவாக்களுக்காக திட்டங்களை வலுப்படுத்தலும் பொதுநிலையினருக்கான பயிற்சிகளை ஏற்படுத்தலும்

(6) அருட்பணியாளர்களாலும், பொதுநிலையினராலும் அருள்பணி புரியும் தலைவர்களுக்கு நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற பயிற்சிகளை தொடர உறுதி செய்தல்

**சமூகத்தில் நற்செய்திப்பணி**

இயேசு அவர்களை நோக்கி, ”உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள். (மாற் 16:15)

(1) கத்தோலிக்கக் கல்விச்சாலைகளுடன் இணைந்து திருச்சபையின் அறிவாற்றளுள்ள சாட்சியத்தை எமது பண்பாட்டில் பலப்படுத்தல்

(2) உயர் மறைமாவட்டம், பங்குகள், கத்தோலிக்க பள்ளிகள், பொதுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அனைவரும் பங்காளிகளாக செயல்பட ஊக்குவித்தல்

(3) கத்தோலிக்க உயர்கல்வி கல்லூரிகளுடன் இணைந்து கல்வி, நம்பிக்கையில் மறைக்கல்வியும் உருவாக்களையும் தூய நிலையையும் சமூகத்தில் நிலை பெற ஒன்றுபட்டு உழைத்தல்

(4) கத்தோலிக்க தொடர்பு அமைப்புகளுடன் இணைந்து பண்பாடுகளை அறிமுகப்படுத்தி சமூக தொடர்பு செயல்பாடுகளை மேம்படுத்தல்

(5) அறிவாற்றல் மிக்க திருத்தூதுப்பணி, சமூக தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து பயிற்சிகளையும் உருவாக்கத்தையும் விருத்தி செய்யும் பணிகளைச் செயற்படுத்தல்







**நீதியும் அன்பும் நிலைக்க கத்தோலிக்க வெளிக் கள பணிகள்.**

ஆண்டவராகிய என் தலைவரின் ஆவி என்மேல் உளது. ஏனெனில், அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார். ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிக்கவும், உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்தவும், சிறைப்பட்டோருக்கு விடுதலையைப் பறைசாற்றவும், கட்டுண்டோருக்கு விடிவைத் தெரிவிக்கவும் என்னை அனுப்பியுள்ளார். (எசாயா 61:1)

(1) எமது கத்தோலிக்க அறக்கட்டளைகள் ஊடாக நீதியையும் அன்பையும் நிலைநாட்ட ஆற்றல் மிக்க வெளிக்களப் பணிகளை ஏற்படுத்தல்
(2) வலுவான அருட்பணி சார்ந்த சேவைகளை ஆன்மிகப் பணியகங்கள், அருட்பணி மிக்க திருப்பணிகளுடாக வழங்குதல்
(3) செயலூக்கமுடைய சமூக நீதிக்காக குரல் எழுப்புவதை ஊக்கப்படுத்தல்
(4) பங்கின் வெளிக்களப்பணிகளின் முயற்சிகளை உயர்மறைமாவட்டத்தோடு இணைந்து வலுப்படுத்தல்

**நமது பேராலயம் எமது நற்செய்திப்பணியின் அடையாளம்**

கிறித்து இயேசுவையே மூலைக்கல்லாகக் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமாய் இருக்கிறீர்கள். - நீங்களும் அவரோடு இணைந்து தூய ஆவி வழியாகக் கடவுளின் உறைவிடமாகக் கட்டப்பட்டு வருகிறீர்கள். (எபேசி 2:20-22)

(1) தூய மைக்கேல் பேராலயத்தின் கட்டட அழகை மேம்படுத்தல்
(2) பேராலயத்தை விருத்தி செய்து பேராலய முற்றத்தை ஒன்று கூடலுக்கும் வழிபாட்டுக்கும் வெளிக்களப் பணிக்கும் ஏற்ற இடமாக மாற்றுதல்
(3) கத்தோலிக்க பள்ளி சபையுடனும் தூய மைக்கேல் பாடகர் பாடசாலையுடனும் இணைந்து செயல் படல்
(4) பேராலயத்திற்க்கு புத்துயிரூட்டி பேராலய மணிக்கூட்டை நற்செய்திபணியின் மையமாக மாற்றுதல்

எமது அருட்பணி நோக்கு ⟷ எமது திருத்தூது நோக்கு

| பங்கில் வாழ்வு | தேவ அழைத்தல் | நீதியும் அன்பும் நிலைக்க கத்தோலிக்க வெளிக்களப்பணிகள் | சமூகத்தில் நற்செய்திப் பணி | எமது பேராலயம் எமது நற்செய்திப்பணியின் அடையாளம |
|---|---|---|---|---|

குடும்பங்களோடு ஈடுபடுதல், குறிப்பாக இளைஞர்களோடு

எமது பல்கலாச்சார தன்மையை கொண்டாடுதல்

எமது வளங்களை விவேகமாக பயன்படுத்தல்

அர்த்தமுள்ள தொடர்பாடல்